முருகப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.07.2023**, செவ்வாய்கிழமை

1. மனமடங்க வகைதரும் வள்ளலே
   மாயை அனைத்தும் வென்று
   ஞானம் பெற அருளும் அண்ணலே
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
   குறைவிலா நவதிகதி குசன் வாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 09 ம் நாள், 25.07.2023, செவ்வாய்கிழமை)
   அறிவுரை ஆசிதனை பட்டினத்தாரும்
   அருளுவேன் உலகோர் மாயை கடந்து
3. கடந்துமே பேரின்ப ஞானம்பெற
   கலியினில் பொறிபுலன் வகை
   இடர்பல கண்டும் செய்துமே
   இன்னும் பலபிறவித் தொடரும்
4. தொடரும் மானிடக் கூட்டங்களே
   தொலைத்து பந்தபாசமுடன்
   இடரான ஆசாபாசங்களையும்
   எல்லாம் கடந்து மீண்டுவர
5. வருகவே கலிமீட்பின் குரு
   வாழும் ஞானி அரங்கனை
   குருவாக ஏற்று மக்கள் பணிந்து
   கோளிடர் கருமவினை நீக்கி
6. நீக்கித் தா என வேண்டி
   நிலமதனில் சன்மார்க்கமாம்
   ஆக்கம் தரும் அரங்கன் நெறியில்
   அனைவரும் சரணாகதி கொண்டு

7. கொண்டுமே ஞானம் பயில
குருபரன் பூசை தொடர
உண்டாகும் குருவருள் பலமாகி
உயிர்கொலை நீக்கி வாழும்

8. வாழும் பண்புநலம் கூடியே
வாஞ்சைபட ஞானிகள் மேல்
நாளும் பூசைகளை செய்து
நம்பிக்கைபட தான தருமங்களை

9. தருமங்களை செய்து வருக
தக்கபடி எல்லா வரமும்
ஆறுமுகப்பெருமான் ஆசிபட
ஆற்றலாக சக்திகள் பரவி

10. பரவியே பரிபக்குவம் கொண்ட
பற்று நீக்கிய பொறிபுலனடக்கிய
துறவிபோல எல்லாத் தெளிவும்
தீங்கிலா ஞானவான்களாக

11. ஆகவே உருவெடுத்து மேலும்
ஆறுமுகன் படைத்த ஞானிகளாக
செகமெங்கும் நிரம்பி நிற்பர்
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—